RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt21s128

# தேவிபாரதி சிறுகதைகளின் ஆண் பாத்திரங்கள் ஒரு பெண்ணிய நோக்கு

த. சிந்துஜா [அ, *]

[அ] தமிழ்த்துறை, அரசுக்கலைக் கல்லூரி, எலையமுத்தூர், உடுமலைப்பேட்டை-642126, தமிழ்நாடு, இந்தியா.

# The male characters of Devi Bharathi short stories are a feminist vision

T. Sinduja [a, *]

[a] Department of Tamil, Government Arts College, Elayamuthur, Udumalaipettai-642126, Tamil Nadu, India.

* Corresponding Author: sinthuklm93@gmail.com

Received: 04-11-2020
Revised: 11-06-2021
Accepted: 15-06-2021
Published: 19-06-2021

## ABSTRACT

The country that enhances the pride of the woman has risen in this earth. In today's age of information technology, women are progressing in various fields on par with men and more than men. They are confident that they can achieve anything in life. But a woman cannot live alone in society. They live on orders in one way or another. In the end, the woman's condition is reduced to a very bad state, no matter what mistakes the woman makes in her life. Women bear more responsibilities. Whether a man makes mistakes or a man makes mistakes, the woman ultimately accepts the consequences. In this way, the problems caused by men to women in devibharathi short story are manifestations of male and female relationship. The article is titled Male Characters A Feminist Vision in Devi Bharathi Short Story, focusing on psychological complexity and the effects of caste discrimination.

**Keywords:** Feminism, Devi Bharathi, Psychology, Society.

## முன்னுரை

பெண்கள் தங்களுடைய திறமைகள், சிறப்புகள், விருப்பங்கள், நம்பிக்கைகள், பிரச்சனைகள் போன்றவற்றை தற்காலத்தில் உணர்ந்து பிறருக்கு உணர்த்தியும் வருகின்றனர். குடும்ப வாழ்க்கையில் துணிச்சலுடனும் தங்களால் எதையும் சாதிக்க முடியும் என்ற தன்னம்பிக்கையுடனும் செயல்பட்டு வருகின்றனர். இல்லற வாழ்க்கை என்பது பெண்ணிற்கு முக்கியமானதாக அமைகிறது. பெண்கள் பொதுவாக ஆண்களைச் சார்ந்து தான் வாழ்கின்றார்கள். பெண் திருமணமாகும் வரையில் தந்தையின் பாதுகாப்பில் வளர்கிறாள். திருமணத்திற்குப் பிறகு கணவனைக் கைப்பிடித்து வாழ்கிறாள். ஒரு குடும்பத்தில் பெண் சரியில்லை என்றாலோ அல்லது ஆண் சரியில்லை என்றாலோ இறுதியில் பெண்ணின் நிலை மிக மோசமான நிலைக்குத் தள்ளப்படுகிறாள். அவ்வகையில் தேவிபாரதி சிறுகதைகளில் பெண்கொடுமைகள், சாதிப் பாகுபாடுகள், அண்ணன் தங்கை அன்பின் வெளிப்பாடு, உளவயல் பிரச்சனைகள், பெண் தேந்தெடுக்கும் தவறான வாழ்க்கையின் விளைவுகள் இவற்றின் மையமாக வைத்து கூறுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## பெண்ணியம்

அடிமைப்பட்டு உரிமைகள் மறுக்கப்பட்டிருக்கும் பெண்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் உருவானதே பெண்ணியம் ஆகும்.

"பெண்ணியம் என்பது பெண்களின் எல்லாச் சிக்கல்களையும் புரிந்து கொண்டு அவற்றை நிக்க முயல்வதாகும்" ஏன்று இரா. பிரேமா பெண்ணியம் என்ற நூலில் குறிப்பிடுகிறார் (Prema, 1994).

மொத்தத்தில் பெண்ணியம் என்பது சமுதாயத்தில் வேலைத்தளத்திலும், குடும்பத்திலும் நிலவும் பெண் ஒடுக்குமுறை மற்றும் சுரண்டல் பற்றிய பெண்மையின் உணர்வு நிலைகளும் இந்நிலையை மாற்றுவதற்குப் பெண்களும், ஆண்களும் எடுக்கும் உணர்வுப்பூர்வமான நடவடிக்கையுமாகும் என்பர்.

## சாதிப்பாகுபாட்டில் பாதிக்கப்படும் பெண்களின் நிலை

சாதியை ஒழிக்க காலந்தோறும் முயற்சிகள் பலராலும் முன்னெடுக்கப்பட்டு வந்துள்ளன. சாதியைக் களைய அரசும், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும், சமூகக் குழுக்களும் முனைந்த போதும் இன்றுவரை முழுமையாக வேரறுக்க இயலவில்லை. சாதியமும் அது சார்ந்த எண்ணங்களும் சாதிய ஏற்றத்தாழ்வுகளும் சமூக வெளியில் பரவலாக இருந்த வண்ணமே உள்ளது. சாதி என்பது இனக்குழு வாழ்க்கையின் நீட்சியாகும். அவ்வாறு உருவாகிய சாதியில் உயர்வோ, தாழ்வோ பாராட்டுவது முறையற்றதாகும்.

தேவிபாரதி பலி என்னும் சிறுகதையில் மனிதர்களின் ஏற்றத்தாழ்வுகளும், தலித் மக்களின் இழிவுநிலையினையும் ஆசிரியர் விளக்குகிறார்.

"சாதிகள் சமமானது இல்லை. அவை ஒன்றுக்கு மேல் ஒன்றாக இருக்கின்றன. சாதி தனக்கு மேலிருப்பவர் மீது வெறுப்பையும் தனக்குக்கீழ் இருப்பவர் மீது இழிவையும் சுமத்துகிறது. சாதி அமைப்பின் இந்த தன்மைதானா மிக மோசமான பின் விளைவுகளைக் கொண்டதாக உள்ளது" என்று தி.மனோன்மணி அவர்கள் சமுதாய அமைப்பு முறை நூலில் கூறியவற்றை அறியலாம். இச்சிறுகதை ஆசிரியர் சாதிப்பாகுபாடு பிரிவினையால் தலித் மக்கள் மிக மோசமான நிலைக்கு தள்ளப்பட்டதை எடுத்துக்காட்டுகின்றனர்.

"ஆண் தனது ஆதிக்கத்தை எதிர்ப்பால் இனமான பெண்ணின் மீது செலுத்தும் நிலையை ஆணாதிக்கம்" என்று நிர்மலாராணி ஆணாதிக்கத்தை பற்றி விளக்குகிறார் (Nirmalarani, 2012). இச்சிறுகதையில் இடம்பெறும் ஒரு ஆண் தனக்கு எதிர்ப்பால் இனமான பெண்ணின் மீது ஆணாதிக்கத்தைச் செலுத்துகிறான்.

இறுதியில் அப்பெண் சித்ரவதை அடைந்து மன அழுத்தத்தின் காரணமாக இறந்து பட்டாள் என்பதை ஆசிரியர் எடுத்துக் கூறுகிறார்.

## உளவியல் பிரச்சினை

உளவியல் என்பது உள்ளத்தின் இயல்பை ஆராய்வதாகும். ஒருவனது மனஅழுத்தத்தின் காரணமாக பாதிக்கப்படும் பிரச்சனையே உளவியல் பிரச்சனை ஆகும்.

"உளவியல் என்பது மனித வெள்ளத்தின் தன்மைகளை விளக்குவது ஆகும். மனித உள்ளத்தின் வாழ்க்கை முறையை பகுத்துக்கூறும் ஓர் அறிவியலே உளவியல் என்று கூறலாம்" என்று முத்து சண்முகம் குறிப்பிடுகின்றார்.

தேவிபாரதி அழிவு என்ற சிறுகதையில் ஒரு ஆணின் உளவியல் பிரச்சனைகளையும் அதனால் ஒரு பெண்ணின் பாதிப்பையும் ஆசிரியர் கூறுகிறார்.

இல்லற வாழ்க்கையில் கணவன் மனைவி உறவு சிறப்பான உறவாக கருதப்படுகின்றன. ஒரு ஆண் தன் மனைவி மீது சந்தேகம் கொள்கிறான். அவன் அசந்து இருக்கும் நேரத்தில் தன் மனைவி கொன்று விடுவாளோ என்று ஒவ்வொரு நாளும் மனதில் பயந்து கொண்டே இருந்தான். அவன் எந்த இடத்திற்குச் சென்றாலும் எந்தப் பொருளைப் பார்த்தாலும், ஆயுதங்களைக் கண்ணால் கண்டாலும் அவள் எப்படியும் என்னைக் கொன்று விடுவாள் என்று மனதை வருத்தித் தூக்கத்தை இழந்தான். ஆனால் மனைவி தன் கணவரின் மீது நல்ல அன்பை காட்டுபவளாகவும், சிறந்த கடமை

செய்பவளாகவும் திகழ்கிறாள். அதனை புரிந்து கொள்ள மறுக்கும் கணவனின் உளவியல் பிரச்சனைகளின் விளைவுகளை ஆசிரியர் சித்தரிக்கிறார்

## அண்ணன் தங்கை அன்பின் வெளிப்பாடு

இன்றைய சமூக நோக்கில் தந்தைக்கு அடுத்தப்படியாக குடும்பத்தைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பும் கடமையும் தனயனுக்கு அமைகிறது.

பொதுவாக சகோதரர்கள் அக்கா, தங்கைக்கு தந்தையாகவும் தயாகவும் காணப்படுகின்றனர். தேவிபாரதி உயிர்தெழுதலின் சாபம் என்ற இச்சிறுகதையில் அண்ணன் தங்கை பால்ய விளையாட்டுக்கள். திருமணத்திற்குப் பிறகு சகோதரிக்கு ஏற்படும் பிரச்சனைகள் சரிகட்டுதலை மையமாக வைத்து இக்கதை அமைகிறது.

சிறுவர்கள் விளையாடும் விளையாட்டுக்கள் பால்ய விளையாட்டுக்களாகும். நல்லன் என்பவன் சிறுவயதில் தன் தங்கையுடன் பட்டாம்பூச்சி பிடித்து விளையாடுதல், குன்றில் மணிச்சேர்த்தல், மரமேறி விளையாடுதல் போன்றவற்றின் மூலம் மகிழ்ச்சி அடைந்தவனாக இருந்தான். வயது வந்த தன் தங்கைக்கு திருமணம் நடத்தி வைத்தான். அவளுக்கு ஏழு பெண் குழந்தைகள் பிறந்தன.

எப்போது தன் தங்கை வாழ்க்கையின் நலனையே நினைத்துக் கொண்டிருப்பான். ஒரு இடத்தில் ஆசிரியர் அண்ணன் வீட்டுக்கு வந்த தங்கையும் குழந்தைகளையும் அவன் மனைவி கொடுமைப்படுத்தியதாகவும் அதனால் அவர்கள் உயிர்விட கிணற்றில் குதித்ததாகவும் கூறுகிறார். இதனை அறிந்த நல்லன் தன் தங்கை குடும்பத்தினை மீட்டு தன் மனைவிக்கு தக்க தண்டனை அளிப்பவனாக காணப்படுகிறான். நல்லன் நல்ல அண்ணனாகவும், பாதுகாப்பவனாகவும், சிறந்த நீதி வழங்குபவனாகவும் இக்கதையில் ஆசிரியர் வடிவமைக்கிறார்.

## தவறான பெண்ணின் வாழ்வு

பண்டைய இலக்கியங்கள் பெண்களின் கற்பைப் பெரிதும் போற்றின. கற்புடைய மனைவியை பெற்றவனே உலகில் தாம் வாழும் காலத்தில் பெரும்பேறு பெற்றவனாக கருதப்படுகிறான்.

“பெண்ணிற்கு பெருந்தக்கயா உள கற்பென்னும்

திண்மை உண்டாகப் பெறின்”

கற்பு என்னும் கலங்கா நிலைமை மட்டும் அமைந்திருக்குமானால் (அக்கற்புடைய) பெண்ணை விடப் பெருமையுடையவை வேறு எவை உள்ளன? எனவும்,

“தெய்வம் தொழாஅள் கொழுறற்றொழுது எழுவாள்

மெய் எனப்பெய்யும் மழை”

காலையில் துயில் எழும்போது, பிரிதொரு தெய்வத்தை தொழாமல், கணவனையே தெய்வமாகக் கருதித் தொழுது எழுகின்ற பத்தினி, பெய் என்றால் மழை பெய்யும் எனவும் வள்ளுவர் கற்பின் மேன்மையைப் பாராட்டியுள்ளார் (Ramasamy, 2012). ஒருவனுக்கு ஒருத்தி எனும் உரிய நோக்கம் இன்று சற்றே நெகிழ்ந்து வருவதைச் சமுதாயத்தில் உணரலாம் இதனை மையமாக வைத்து,

தேவிபாரதி “ஒளிக்கும் பிறகு இருளுக்கும் அப்பால்” சிறுகதையில் ஒரு பெண் தன் கணவனுக்கு துரோகம் செய்வதையும், அவள் அருண் என்ற ஆணுடன் தவறான தொடர்பின் காரணமாக தன் கணவனையே கொலை செய்தாள் என்பதையும் ஆசிரியர் கூறுகிறார்.

## முடிவுரை

பெண் தனியாக வாழக்கூடியவள் அல்ல. ஏதாவது ஒரு வகையில் ஆணைச் சார்ந்து தான் வாழ்கிறாள். சிறுவயதில் தந்தை பாதுகாப்பில் வளர்ந்து, திருமணத்திற்குப் பிறகு கணவன் கைப்பிடிக்கிறாள். கணவனுக்கு அடுத்த இடமாக தன் மகனைச் சார்ந்து வாழ்வதாக கூறப்படுகிறது. சாதிப்பிரிவுகளில் எப்போதும் தீயவிளைவு தான் அடையப்படுகின்றன. ஒரு பெண் சிறந்த கற்புடைய பெண்ணாக இருந்தால் மட்டுமே இல்லற வாழ்க்கையை சரிகட்ட முடியும். இல்லையெனின் திருமண வாழ்க்கையில் துயரங்கள் அடையும் நிலை ஏற்பட்டு விடும்.

## References

Nirmalarani, V., (2012) Penniya Thiranaivu, Kaavya Pathippagam, Chennai, India.

Prema, R., 1994) Penniyam, International Institute of Tamil Studies, Chennai, India.

Ramasamy, M.P.M., (2012) Thirukkural Miga Miga Eliya Urai, Sree Indhu Publications, Chennai, India.

**Funding:** NIL
**Acknowledgement:** NIL
**Conflict of Interest:** NIL
**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The author 2021. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License